அனுப்புநர்

திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப.,

இயக்குநர்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,

பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,

சென்னை – 15.

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,

அனைத்து மாவட்டங்கள்

(சென்னை நீங்கலாக)

**ந.க.எண்.73232/2021/ஊராட்சி.2.2,** **நாள்: 20.10.2023**

**அய்யா/அம்மையீர்,**

பொருள்: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - கிராம சபைக் கூட்டம் – **01.11.2023 – உள்ளாட்சிகள் தினத்தன்று** கிராம சபைக் கூட்டம் நடத்துதல் –கூட்டப் பொருள்கள் அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.245, ஊ.வ.(சி1) துறை, நாள் 19.11.1998.
2. அரசாணை (நிலை) எண்.130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 25.9.2006.
3. அரசாணை (நிலை) எண்.65, ஊ.வ(ப.ரா.2) துறை, நாள் 24.5.2022.
4. அரசாணை (நிலை) எண்.86, ஊ.வ(ப.ரா.2) துறை, நாள்.15.07.2022.

-----

பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணைப்படி, **உள்ளாட்சிகள் தினத்தன்று (01.11.2023)** அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். கிராம சபைக் கூட்டத்தினை ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையை பின்பற்றி உள்ளாட்சிகள் தினத்தன்று 01.11.2023 காலை 11.00 மணி அளவில் நடத்த வேண்டும். பார்வை 2-ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு குறைவெண் வரம்பின்படி உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையில் குறிப்பிட்டுள்ள பொருள்களுடன் 01.11.2023 அன்று நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பொருட்கள் விபரங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும், அனைத்து கிராம மக்களும் ஆர்வத்துடன்

எதிர்வரும் கிராம சபைக் கூட்டத்தில் கலந்துக் கொள்ள ஏதுவாக கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ள இடம், நேரம் ஆகியவற்றை கிராம மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

கிராம சபைக் கூட்டங்கள் மதச்சார்புள்ள எந்தவொரு வளாகத்திலும் நடந்திடக் கூடாது. கிராமசபைக் கூட்டங்கள் நடைபெறும் இடத்தை முன்கூட்டியே ஊரகப் பொதுமக்களுக்கு தெரியப்படுத்திட வேண்டும்.

பார்வை 4-ல் காணும் அரசாணையின் படி கிராம சபைக் கூட்டத்திற்கான செலவின வரம்பு ரூ.5000/- ஆக உயர்த்தப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், 01.11.2023 அன்று நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெற உரிய நடவடிக்கை எடுத்திடவும், கூட்ட நிகழ்வுகளை நம்ம கிராம சபை செயலி " Namma Grama Sabhai Mobile App" மூலம் உள்ளீடு செய்திட வேண்டும் எனவும், அது குறித்த அறிக்கையை 01.11.2023 அன்றே இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: கிராம சபைக் கூட்டப் பொருள்கள்.

ஒம்/- பா.பொன்னையா

இயக்குநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

G. Md 20/10/2023

இயக்குநருக்காக

20/10/23

நகல்-

1. அரசு முதன்மைச் செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 9.
2. மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை-35.
3. திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
அனைத்து மாவட்டங்கள்.
4. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
அனைத்து மாவட்டங்கள்.

## நவம்பர் 1 – உள்ளாட்சிகள் தினத்தன்று நடத்தப்பெற வேண்டிய கிராமச்சபை கூட்டங்களுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பொருள்கள் விவரம்.

1) **பொருள் 1: மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தல்.**

நவம்பர் 1 ஆம் நாளினை தமிழகத்தின் உள்ளாட்சிகள் தினமாகக் கொண்டாடப்படும் என அறிவிப்பு செய்து அதனைச் சிறப்பிக்கும் விதமாக இன்று கிராம சபை உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு உத்தரவு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தல்.

2) **பொருள் 2: கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களை சிறப்பித்தல்:**

கொரோனா பெருந்தொற்று காலம் முதல் தற்போது முடிவடைந்த 'நம்ம ஊரு சூப்பரு' இயக்கத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி சிறப்பாக சேவை புரிந்து தூய்மைக் காவலர்கள் உள்ளிட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு கிராமசபை மூலம் பாராட்டு தெரிவித்தல்.

3) **பொருள் 3: கிராம ஊராட்சியில் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களை கௌரவித்தல்.**

கிராம ஊராட்சியின் வளர்ச்சியில் முதுகெலும்பாக திகழும் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பாக செயல்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பாராட்டு தெரிவித்தல்.

4) **பொருள் 4 : வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கிராம ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக கீழ்கண்டவற்றை பின்பற்றிடும் பொருட்டு கிராம சபையில் விவாதித்தல்.

1. தாழ்வான மற்றும் மழைநீர் தேங்கக்கூடிய வாய்ப்புள்ள பகுதிகளை அடையாளங்கண்டு அவ்விடங்களில் மழைநீர் தடைபடாமல் செல்லும் வகையில் வழியேற்றுதல்.
2. புயல் பாதுகாப்பு மையங்களை முறையே சுத்தப்படுத்தி தயார் நிலையில் வைத்தல். புயல் பாதுகாப்பு மையல்களில் குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி, கழிப்பிட வசதி போன்றவற்றை முறையே பயன்படுத்திடும் வகையில் தயார் நிலையில் வைத்தல்.
3. பருவமழை தொடங்குவதற்கு முன்பே வாய்க்கால்களில் உள்ள அடைப்புகளை நீக்கி, மழைநீர் வழிந்தோடுவதற்கான வகையை ஏற்படுத்துதல்.

4. தேவையான மணல் மூட்டைகள் / சவுக்கு கட்டைகள் போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருத்தல்.
5. ஏரிகள், பாசன ஏரிகள், குளம், குட்டைகள் போன்றவற்றின் கரைகளை கண்காணித்தல்.
6. மாவட்ட நிர்வாகம் மூலம் அவ்வப்போது தரப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் .

5) **பொருள் 5: இணையவழி வீட்டுவரி / சொத்துவரி செலுத்துதல்:**

வீட்டுவரி/சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, தொழில் உரிமக் கட்டணம், மனைப்பிரிவு அங்கீகாரம் மற்றும் கட்டட அனுமதி போன்றவை தற்போது இணையவழி செலுத்தும் முறை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சியிலுள்ள பொதுமக்கள், தங்களுடைய வீட்டுவரி/சொத்துவரி ஆகிய விவரங்கள் சரியாக உள்ளதா? என்பதையும், தங்களது கைப்பேசி எண்கள் சரியாக உள்ளீடு செய்யப்பட்டுள்ளதா? என்பதையும் சரிபார்த்திடத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதன் மூலம் ஊராட்சியில் உள்ள பொதுமக்கள், எளிதாக வரி செலுத்துதல் மற்றும் இரசீது பெறுதல் போன்றவற்றை இணையம் வழி பெறலாம் என்கிற விவரத்தை கிராம சபையின் முன் வைத்தல்.

ஒம்/– பா.பொன்னையா
இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

G. Mdu 20/10/2023
இயக்குநருக்காக

20/10/23